අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +9411 2785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. EPD/Dis/01/01

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2022.09. 08

கல்வி அமைச்சின் சுற்றறிக்கை எண். 29/2022

அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
மாகாண/வலயப் பாடப்புத்தகங்களுக்குப் பொறுப்பான பிரதி/உதவி கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்ட பிரதி கல்வி பணிப்பாளர்கள் / உதவிக் கல்வி பணிப்பாளர்கள்,
பிரிவெனாதிபதிகள்,
அரசு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் அதிபர்கள்,
பாடநூல் நிலைய அலுவலர்கள்,
பாடப்புத்தகங்களுக்கு பொறுப்பான ஆசிரியர்கள்,

**<u>பாடசாலை பாடப்புத்தகங்களின் மீள்பயன்பாட்டை ஊக்குவித்தல்</u>**

கல்வி வெளியீட்டுத் திணைக்களம் வருடாந்தம் அனைத்து அரச பாடசாலைகள், அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் மற்றும் பிரிவேனாக்களில் பயிலும் மாணவர்களுக்கு 410 வகையான பாடப்புத்தகங்களின் சுமார் 40 மில்லியன் பிரதிகளை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலங்களில் இலவசமாக வழங்குகிறது. 2022ஆம் ஆண்டில் பாடப்புத்தகங்களை அச்சிட்டு விநியோகிப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்ட செலவினம் 4500 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும்.

02. பெரும் பொருட்செலவில் தயாரிக்கப்பட்ட பாடப்புத்தகங்களை மீண்டும் பயன்படுத்தக் கூடிய வகையில் பாவிக்கும் பொறுப்பு மாணவர்களைச் சார்வதுடன், அவர்களை வழிநடத்தும் பொறுப்பு அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களைச் சார்கின்றது. இவ்வாறு, பாடப்புத்தகங்களை அதிகமாக மீண்டும் பயன்படுத்துவதன் மூலம், அரசு சேமிக்கும் பொதுப் பணத்தை, கல்வித் துறையின் முன்னேற்றத்திற்கு செலவிட வாய்ப்பு ஏற்படும்.

03. எனவே, கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள சதவீதத்தின்படி, பயன்படுத்திய செயல்நூல்களைத் தவிர மற்ற பாடப்புத்தகங்களை மீண்டும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். புதிய பாடசாலை தவணைக்கான பாடப்புத்தகங்கள் மூன்றாம் தவணையின் முடிவில் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டியுள்ளதால் பயன்படுத்தப்பட்ட பாடப்புத்தகங்கள் தவணை இறுதிப் பரீட்சைக்கு இடையூறு இல்லாத வகையில் விநியோகிக்க பாடசாலை மூலம் தயாரித்த திட்டத்திற்கேற்ப அவை பாடசாலையால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். அந்த வகையில், கீழே உள்ள 3.1 இன் அளவுகோல்களின்படி செயல்பட வேண்டியது அவசியம்.

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk

3.1 பாடநூல் மீள்பயன்பாட்டு அளவுகோல்கள்

| தரம் | பாடப்புத்தகங்களைத் திரும்பப் பெறுதல் | மீள்பயன்பாட்டு சதவீதம் |
|---|---|---|
| 1, 2 | மீளப்பெறல் மற்றும் மீள்பயன்பாடு தேவையில்லை. | புதிய புத்தகங்கள் வழங்கப்படும் |
| 3, 4, 5 | 3, 4 தரங்களில் சமய பாடப்புத்தகங்கள் அனைத்தும் அந்தந்த தரத்தின் உரிய வருடத்தின் மூன்றாம் தவணை முடிவில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.<br><br>தரம் 3 மற்றும் 4 இல் பொறுப்பேற்கப்படாத எஞ்சிய புத்தகங்கள் மற்றும் தரம் 5 இல் உள்ள அனைத்து புத்தகங்களும் (செயல்நூல்கள் தவிர) தரம் 5 யிற்கான வருடத்தின் மூன்றாம் தவணை முடிவில் திரும்பப் பெறப்பட வேண்டும். | 35% |
| 6, 7, 8, 9 | செயல்நூல்கள் தவிர அனைத்து பாடப்புத்தகங்களும் மூன்றாம் தவணை முடிவில் திருப்பித் பெறப்பட வேண்டும். | 60% |
| 10, 11 | தரம் 10ன் பாடப்புத்தகங்கள் திரும்பப் பெறப்படக்கூடாது.<br><br>10ம் தர பாடப்புத்தகங்கள் 11ம் தர வகுப்பு பாடப்புத்தகங்களுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சை முடிவில் திருப்பிப் பெறப்பட வேண்டும்.<br><br>க.பொ.த (சாதாரண) பரீட்சையில் தோற்றிய எந்த மாணவரும் குறிப்பிட்ட பாடத்திற்கு மீண்டும் தோற்ற நினைத்தால், அந்த பாடம் தொடர்பான பாடப்புத்தகங்களை திருப்பிப் பெறக்கூடாது. சாதாரண தர பரீட்சையில் அனைத்துப் பாடங்களுக்கும் மீண்டும் தோற்றினால் பாடப்புத்தகங்களைத் திருப்பிப் பெறக்கூடாது. | 40% |
| 12, 13 | பொது ஆங்கிலப் புத்தகம் உயர்தர பரீட்சையின் முடிவில் திருப்பிப் பெறப்பட வேண்டும். | 60% |

04. மீள்பயன்பாட்டிற்கு பொருத்தமான பாடப்புத்தகங்களைத் தேர்வு செய்தல்.

4.1 கிழிந்த பக்கங்கள் / மடிந்த மூலைகள் / பக்கங்கள் கிழிந்த அல்லது அட்டை கிழிந்த / பிரிக்கப்பட்ட அல்லது குறிப்புகள் எழுதப்பட்ட/ பாகங்கள் வெட்டப்பட்ட பாடப்புத்தகங்கள் மீண்டும் பயன்படுத்தப்படக் கூடாது.

4.2 எனினும், பாடநூல்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள், ஒட்டுமொத்த நிலையின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட புத்தகத்தை மீள்பயன்பாட்டிற்கு ஏற்றதாக கருதினால், அந்த புத்தகங்களை மீண்டும் பயன்படுத்த வேண்டும்.

05. மாணவர்களுக்கு பாடப்புத்தகங்களை வழங்குவதில், பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

5.1 எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு மாணவருக்கும் கொடுக்கப்பட்ட அனைத்து புத்தகங்களும் பயன்படுத்தப்பட்டவையாக இருக்க்கூடாது.

5.2 அனைத்து மாணவர்களுக்கும் பாரபட்சமின்றி புதிய மற்றும் பயன்படுத்தப்பட்ட பாடப்புத்தகங்கள் கலந்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

06. பாடப்புத்தகங்களின் பயன்பாடு தொடர்பாக பின்வரும் விடயங்கள் குறித்து மாணவர்கள் அறிவுருத்தப்படல்
வேண்டும்.

6.1 பாடப்புத்தகங்களில் குறிப்புகள் எழுதுதல், வர்ணம் தீட்டல் கூடாது

6.2 படங்கள் வெட்டியெடுக்கப்படக் கூடாது

6.3 பக்கங்களை அகற்றவோ, மடிக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது

6.4 பாடப்புத்தகங்கள் பாதுகாப்பாக இருக்கும் வகையில் புத்தகங்களைப் பாடசாலைப் பையில் வைக்க வேண்டும்

6.5 பாடப்புத்தகங்கள் பாதுகாப்பாக இருக்கும் வகையில் வெளிப்புற உறைகளிட்டு பயன்படுத்தப்பட வேண்டும்

07. இந்த செயல்முறை தொடர்பாக, அதிபரின் மேற்பார்வையின் கீழ், பாடநூல்களுக்குப் பொறுப்பான ஆசிரியர் மற்றும் வகுப்புகளுக்குப் பொறுப்பான ஆசிரியர் தங்கள் பொறுப்பை அர்ப்பணிப்புடன் நிறைவேற்ற வேண்டியதோடு தொடர்புடைய பதிவுகள் மற்றும் புள்ளிவிபரங்கள் (புத்தகங்களின் பெறுகைகள் மற்றும் விநியோகம்) ஒரு CR புத்தகம் அல்லது கடிதக் கோப்பு மூலம் சரியாக பேணப்பட வேண்டும். கல்வி அமைச்சு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், மாகாண கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகம், கோட்டக் கல்வி அலுவலகம் ஆகியவற்றின் அதிகாரிகள் பாடநூல் பாவனையை மேற்பார்வையிட வரும்போது, உரிய ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

08. பாட விதானம் மாற்றப்பட்டு அல்லது பயன்படுத்த முடியாத நிலையில் நீக்கப்படும் பாடப்புத்தகங்கள் 20.02.2014 திகதியிட்ட இலக்கம் 2014/01 மற்றும் 30.01.2017 திகதியிட்ட இலக்கம் 2014/01(i) தாங்கிய கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் சுற்றறிக்கைகளின் ஒழுங்குவிதிகளின்படி அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

09. பாடப்புத்தகங்களை மீளப் பயன்படுத்தும் இச்செயற்பாடு பொதுப் பணத்தை மீதப்படுத்துவது மட்டுமன்றி மாணவர்களிடையே வளங்களை கவனமாக பாவித்தல் மற்றும் பரோபகாரம் போன்ற நல்ல மனப்பான்மைகளின் வளர்ச்சியும் எதிர்பார்க்கப்படுகிறது.

10. பாடப்புத்தகங்களை மீளப் பயன்படுத்தும் முதல் பொறுப்பை இதன் மூலம் அதிபர்கள்/ பிரிவெனாதிபதிகளுக்கு வழங்குகிறேன். அந்த நடவடிக்கைகள் தேசிய மட்டத்தில் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாலும், மாகாண மட்டத்தில் மாகாண கல்விப் பணிப்பாளராலும், வலய மட்டத்தில் வலயக் கல்விப் பணிப்பாளராலும் மேற்பார்வை செய்யப்பட வேண்டும்.

11. பாடப்புத்தகங்களை முறையாகப் பயன்படுத்தி மீள வழங்கியமை குறித்து மாணவர்களை மதிப்பிடுவதற்கும் அந்தப் பணியின் சரியான ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு செய்தமை தொடர்பாக ஆசிரியர்களை மதிப்பிடுவதற்கும் வழிமுறைகள் மாகாண, வலய மற்றும் பாடசாலை மட்டத்தில் ஆண்டுதோறும் செயல்படுத்தப்பட வேண்டும்.

12. பாடப்புத்தகங்களை மீளப் பயன்பாடு செய்யும் செயல்முறையானது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பயனுள்ள பணியாகக் கருதப்பட்டு, அதை வெற்றிகரமாகச் செய்ய முழு ஆதரவு அளிக்கப்படும் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

13. பாடப்புத்தகங்களின் மீள்பயன்பாடு தொடர்பாக முன்னர் வெளியிடப்பட்ட அனைத்து சுற்றறிக்கைகளும் இதன் மூலம் ரத்து செய்யப்படுகின்றன.

எம். என். ரணசிங்க
செயலாளர்
கல்வி அமைச்சு